தீபாவளி மின்னல்

வெண்கல உருளையைப் பல முறை வெளியில் திருப்பித் திருப்பிப் பார்த்தாள் சாந்தா. திருச்சூரிலிருந்து புதிதாக வார்க்கப்பட்டு வந்த அதில் அதற்குள் எப்படியோ விரிசல் ஏற்பட்டு விட்டது. அதைப் பார்த்துப் பார்த்து அங்கலாய்த்த வண்ணம் இருந்தாள் அவள். வெண்கலத்தின் அழகே அந்தச் சிறு விரிசலினால் கெட்டுவிட்டதென்று சொல்லி விட முடியாது. விரிசல் மிகவும் சிறியதாக மயிரிழைதான் இருந்தது. ஆயினும் விரிசல் விரிசல்தானே?

'மனித வாழ்வும் உறவும் கூட இப்படித்தான் இருக்கின்றன.' சிறு விரிசல்தான். ஆனால் அதைப் பெரிய பிளவாக்குவது எளிதாயிற்று? விரிசல் இல்லை என்று ஈயப்பற்று வைப்பதும் உசிதமல்ல. மயிரிழை விரிசலை அது மலையத் தனை

அல்லவா எடுத்துக்காட்டும்? என்றெல்லாம் ஓடியது அவள் சிந்தனை.

'அற்ப வெண்கலம் ஒன்றை வைத்துக்கொண்டு எவ்வளவு நேரம் மாய்ந்து போவாய் சாந்தா? தூக்கி எறி! என்று பின்னால் வந்து நின்ற அவள் கணவன் டாக்டர் திவாகரன் கடிந்தான்.

'தூக்கி எறிந்துவிட முடியுமா?, என்று சாந்தா கேட்டது அவனைத்தான் கேட்டாளா, அல்லது தன்னையேதான் கேட்டுக்கொண்டாளா என்று ஐயுறுமாறு மெதுவாக இருந்தது.

'இல்லாவிட்டால் மீண்டும் அழித்து வார்க்கச் சொல். ஒரு பாத்திரத்துக்காக ஏங்குகிற காலம் போய், நினைத்ததை யெல்லாம் வாங்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். இருந்தாலும் உனக்குப் பழைய அசட்டுத்தனங்களில் ஒன்றுகூடப் போகவில்லை. உடைசல் பாத்திரம், கந்தல் துணி, கரிவேஷம், பிச்சைக்காரப் பயல்கள் சிநேகம்-நீ முன்னேறவே மாட்டாய் சாந்தா, முன்னேறவே மாட்டாய்!' என்று திவாகரன் வருத்தத்தோடு கூறினான்.

'முன்னேறாமல் என்ன?, என்று பதிலளித்துவிட்டு, சாந்தா உருளியை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். நேராகப் பூஜையறைக்குத்தான் போனாள். சுவரில் இருந்த நிலைக்கண்ணாடி ஒன்றில் அவள் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். பலகீனத்தின் சின்னமாக அவளது இரண்டு கண்களையும் கருவளையங்கள் சூழ்ந்திருந்தன. காலையில் லேடி டாக்டரிடம் போய் விட்டு வந்ததி லிருந்து ஒருவித பீதி அவளை ஆட்கொண்டு விட்டது உண்மைதான். இந்த மாதிரிச் சயமத்தில்- நீரில் மூழ்கி உயிருக்கு மன்றாடுகிறபோது சிறு துரும்பைக் கூடப் பிடித்துக்கொண்டு கரை ஏறப் பார்க்காமாட்டேனோ, அதே

போல- சாந்தாவும் எப்படியும் இந்த முறை தான் பெற்றுப் பிழைக்க வேண்டுமே என்கிற பயத்தில் மூட நம்பிக்கை என்று கருதப்பட்டாலும் சிலவற்றைச் செய்து வந்தாள். அதைத்தான் திவாகரன் 'முன்னேற மாட்டாய்" என்று குறிப்பிட்டு அலுத்துக்கொண்டான்.

திவாகரன் குறிப்பிட்டது போல அவர்கள் முன்பு இருந்ததைவிட இப்போது பலவிதத்தில் முன்னேறித்தான் இருந்தார்கள். முன்னைப் போல இப்பொழுதெல்லாம் தெரு பெஞ்சியில் நோயாளிகளின் கூட்டம் காத்திருப்ப தில்லை; அவர்கள் செய்யும் அசுத்தத்தையெல்லாம் சாந்தாவே கழுவி விட்டிருக்கிறாள். கம்பவுண்டர் ஜகதீசன் மருந்து கலப்பதில்லை.

வீடே மாறிவிட்டது. பழைய திண்ணையும் பெஞ்சும் எங்கு சென்றனவோ? இப்பொழுது தெருவில் முகப்புக் கட்டடம் ஒன்று பளபளவென்று மின்னியது. அதில் கார்கள் வந்து நின்றன. 'சாமி, வைத்தியரய்யா, காப்பாத்துங்க' என்று தெருக்கதவை 'தடதடவென்று தட்டும் கூட்டமே இப்பொழுது கிடையாது. அவசரமாக வேண்டியவர்கள் டெலிஃபோனில் கூப்பிடுவார்கள். காரில் வந்து இறங்கி, நாசுக்காக விளிமணியை அழுத்துவார்கள். முன்னைப் போல் கல்லாப் பெட்டியைக் கொட்டி எண்ணுவதும் கிடையாது. எல்லாம் அநேகமாக 'செக் தாள்கள்; வாங்கிய மாத்திரத்தில் பாங்கிக்குப் போய் விடும்.

ஆனால் இப்பொழுதல்லவா விரிசல் கண்டுவிட்டதாக சாந்தாவுக்குத் தோன்றிவிட்டது!

சாந்தா மட்டும் முன்னேறவில்லையா? கணவனோடு கூடவே அவளும் அவன் விருப்பப்படி முன்னேறிப் பல சௌகரியங்களை அநுபவித்துத்தான் வந்தாள். ஆனாலும் ஒரு மயிரிழை விரிசல் அவள் மனசுக்குப் பட்டுவிட்டது.

அதைக் காணப் பிரியப்படாதவள் போல் அவள் தோட்டத்துப் பக்கம் போனாள். மரத்தடியில் தச்சன் வேலை செய்து கொண்டிருந்தாள்.

'ஆகிவிடுமா, அப்பா?'

'நீங்கள் பிரியப்பட்டபடி நன்றாகச் செய்து தருகிறேன். அம்மா.'

மழை பெய்து கொண்டே இருந்ததால் கீழே யெல்லாம் ஒரே ஈரம். மர நிழலினால் அவன் நனைய வில்லையே தவிர, அவன் கால்கள் சேற்றுப் புண்களினால் வெள்ளை வெளேரென்று தேய்ந்து போயிருந்தன. குளிர் போலும்; மெலிந்த அவன் தேகம் நடுங்கியது.

சாந்தா கார் ஷெட்டைத் திறந்து விட்டாள். 'உள்ளே போய் வேலை செய், அப்பா, என்றாள்.

'ஐயா கார் விடவேண்டுமே?' என்று கேட்டுத் தயங்கினான் தச்சன்.

'இப்பொழுது தேவையில்லை' என்று பதில் தந்த சாந்தா மீண்டும் வீட்டிற்குள் வந்தாள். 'அவன் சாமானியத் தச்சனா?' அவள் வரையில் அவன் ஒரு தெய்வம் போல.

முதன்முதல் அவன் வந்த காட்சி அப்படியே பளிச்சென்று அவள் நினைவில் பசுமையாக நின்றது. ஒரு சிலரைச் சந்திக்கும் நேரம் அப்படி அமைகிறது. சாந்தாவுக்கும் அப்பொழுது அத்தகைய பலஹ“ன நிலை.

கல்யாணமாகி எட்டு வருடங்களாகியும் சாந்தாவுக்கு மக்கட்பேறு உண்டாகவில்லை. திவாகரன் வீட்டினர் நேர்முகமாகவும் மறைவாகவும் பேசிய பேச்சுக்கள் சாந்தாவின் புண்பட்ட மனத்தில் வேலாகப் பாய்ந்தன. அவள் கணவனைத் தவிர அந்தக் குடும்பதிற்குச்

சந்ததியே இல்லை. தாங்க முடியாத பளு ஒன்றைத் தாங்குவது போலத் தவித்தாள் சாந்தா. மணி, மந்திரம், என்று எல்லாம் பார்த்தாகிவிட்டது.

ஒருநாள் அவள் உற்சாகமிழந்து தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்த சமயம். அந்தத் தச்சன் வந்து நின்றான். ஒரு நோஞ்சான் குழந்தை அவன் தோளில் துவண்டது. அதைப் பார்க்கவே உடல் கூசியது. எலும்புக் கூட்டின்மீது மெல்லிய சல்லாத் துணியை விரித்தது போல உடல் மெல்லியதா இருந்தது. எங்கு விரல்பட்டால் அங்கு நைந்து விடுமோ என்று அஞ்சுமளவு ஒடுங்கி யிருந்தது குழந்தை. கழுத்தின் எலும்புகள் நீண்டு, தலைமயிர் பிச்சம் பிச்சமாகத் தெரிய, குரங்குக் குட்டி போல இருந்தது அதன் தோற்றம். சிசுவின் கண்கள் மட்டும் நிமிர்ந்து சாந்தாவைப் பார்த்தன. அவற்றைக் கண்டதும் அவள் வயிற்றில் ஒரு புரட்சி. அது அருவருப்பா, அநுதாபமா என்று கூடத் தெரியாத ஒரு வித உலுக்கல்.

'டாக்டர் ஐயா இருக்கிறாரா?' என்று கேட்டான் தச்சன்- 'அன்று, அப்பொழுது, அவன் தொண்டை எப்படி அடைத்தது!'

சாந்தாவுக்கு பதில் கூடச் சொல்லத் தெரியவில்லை. தலையை ஆட்டிக் கொண்டே அவள் உள்ளே விரைந் தாள். கணவனை அழைத்து வந்தாள். பிறகு நிற்க முடி யாமல் உள்ளே போய் விட்டாள்.

டாக்டர் திவாகரன் கைபட்டதும் அந்தக் குழந்தை படிப்படியாகக் குணமாகித் தேறியது.

அதற்குப் பிறகு அந்தத் தச்சன் தனக்கு இயன்றதை டாக்டருக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டுப் போக வந்தான். சாந்தாவின் வீட்டிற்கு அப்பொழுது அவள் தங்கையும், மற்றும் சிலரும் வந்திருந்தனர். அதனால்

அவள் வெளியே வரவில்லை. வெகு நேரம் கழித்து கணவன் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பும் சமயம்-கையில் காபியுடன் அவள் வெளியே வந்தபோது தச்சன் காத்திருப்பதைப் பார்த்தாள்.

'சாந்தா, உன்னைப் பார்த்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறானே இந்த மனிதன்?' என்றான் திவாகரன். அப்பொழுதெல்லாம் அவன் எல்லோரிடமும் கருணையோடு இருந்தவன் தானே?

சாந்தா நிமிர்ந்து நோக்கினாள். அவள் இடுப்பில் அவள் தங்கையின் குழந்தை இருந்தது. தச்சனைக் கண்டதும் அது பயந்து கூக்குரலிட்டது.

'அழாதே, பாப்பா. இந்தா, இந்தா' என்று சமாதானப் படுத்தினான் அவன். பிறகு தன் மேல் துணியிலிருந்து ஒரு பொம்மைத் தொட்டிலைச் சாந்தாவிடம் நீட்டினான். பொம்மையைப் பார்த்ததும் குழந்தை அழுகையை நிறுத்தி, பொம்மையை நோக்கித் தாவியது.

'அம்மா, நீங்க ரொம்ப காலம் ஆயுசோடு நன்றாக இருக்கவேண்டும். உங்கள் பிள்ளை குட்டிகள் நன்றாக இருக்க வேண்டும்' என்று வாயார வாழ்த்தினான் தச்சன். அதைக் கேட்ட சாந்தாவுக்கு வேதனைதான் மூண்டது. அதனால், தொட்டிலையே பார்ப்பது போல முகத்தைக் குனிந்து கொண்டாள்.

'அன்னைக்கு ஐயா பார்க்கல்லே. என் வீட்டே நசித்துப் போயிருக்குமுங்க. எங்க குடும்பத்திலே சாபக்கேடு; ஆண் பிள்ளைங்க பிழைக்கிறதில்லே. என் பெண்சாதியும் நாலு மாசமாக சீக்காய்ப் படுத்திருக்குதுங்க. இந்தக் குழந்தை, இதுக்கு முந்திப் பிறந்த எல்லாப் பிள்ளைக் குழந்தை களைப் போலவே, ஆறாவது மாசம் முதலே இளைக்க

ஆரம்பிச்சுட்டுது. அவளாலே தாங்க முடியல்லே; தானும் விழுந்துட்டா. அஞ்சு பசங்களைப் பறிகொடுத்து விட்டோமுங்க. ஆறாவது இவன். இவனைக் காப்பாத்தி, எங்க குடும்பத்தையே தூக்கிவிட்ட கை உங்க பொன் கை. நீங்க நல்லா இருக்கணும். இந்த ராஜா நல்லா இருக்கணும்' என்று தச்சன் உணர்ச்சி வசமாகப் பேசி முடித்தான்.

அவன் சென்ற பிறகுகூட சாந்தா தோட்டத்திலேயே சுற்றிச் சுற்றி வந்தாள். தொட்டிலைக் கீழே போட்டு விட்டான் குழந்தை. சாந்தா குனிந்து அதை எடுத்தாள். தச்சன் எவ்வளவு அழகாகச் செய்திருந்தான் அதை!

அன்று முதல் அந்தத் தொட்டில் மிக மிக அருமை யாகி விட்டது அவளுக்கு. அதை அவள் தன் பீரோவில் பத்திரமாக வைத்திருந்தாள். கோகுலாஷ்டமி யன்று கிருஷ்ணனை அந்தத் தொட்டிலில் வைத்தே பூஜை செய்தாள்.

அந்த வருஷமே சாந்தாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிரசவ சமயத்தில் அவள் சிரமப்பட்டாள். அந்தத் தச்சன் மறுபடியும் அவள் கண்ணில் படவில்லை யாயினும், அவளுக்கு அவன் நினைவாகவே இருந்தது. அவனுடைய வாழ்த்தொலி அவளது செவியில் ரீங்கார மிட்ட வண்ணம் இருந்தது. அதனாலேயே குழந்தையும் தானும் உயிர் பெற்றதாக அவள் எண்ணினாள்.

இரண்டு மூன்று வருடங்கள் கழிந்த பிறகு ஒரு நாள் சாந்தா தன் குழந்தையைப் பூங்காவில்விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது 'அம்மா, சுகமாக இருக் கிறீங்களா?' என்ற குருல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அந்தத் தச்சன்தான்!

'என்னப்பா, சவுக்கியமாக இருக்கிறாயா? என்று பதிலுக்குக் கேட்டாள் சாந்தா. அதற்குமேல் ஒன்றும் பேசத் தெரியவில்லை அவளுக்கு. அவனுடைய நல்லாசியால் ஏற்பட்ட உறவை விவரிக்க வார்த்தை புரியாமல் திணறினாள் அவள்.

'டாக்டர் ஐயா புண்ணியத்திலே நல்லாத்தான் இருக்கிறோமுங்க. இப்ப கூட ஓர் ஆண்பிள்ளைக் குழந்த பிறந்திருக்குதுங்க.

'அது ஆரோக்கியமாக இருக்கிறதா?'

'ஆமாமுங்க. ஐயா சொன்னபடியே செய்துக்கிட்டு வந்தோம். ஆண்டவன் தயவிலே நல்லா இருக்குதுங்க.'

'நீ ஐயாவைப் பார்த்தாயா?'

'வாரத்துக்கு ஒரு தடவை ஆஸ்பத்திரியிலே பார்க்கறேனுங்களே?'

சாந்தா அவனுடன் ஏதேதோ பேசினாள். அந்தச் தச்சனைப் பார்த்து, அவன் கையினால் குழந்தைக்குத் தொட்டில் செய்ய வேண்டும் என்று அவள் ஆசைப் பட்டது திவாகரனுக்குத் தெரியும். அவனைக் கண்டதைப் பற்றி அவர் தன்னிடம் ஏன் ஒன்றுமே சொல்லவில்லை?

இதில் மர்மம் ஒன்றுமில்லை. தானும் ஒருநாள் ஏழையாக இருந்தவன்தான்; இந்த மாதிரி ஏழைகளுக்கு மருந்து கொடுத்துத்தான் இன்று பெரிய நிலைக்கு வந்திருக்கிறோம் என்பதை மறந்துவிட்டான் திவாகரன்.

சாந்தா தச்சனைப் பார்த்துப் பேசினாள். 'உன் கையினால் குழந்தைக்கு ஒரு தொட்டில் செய்து கொடுப்பாயா?' என்று கேட்டாள்.

'நல்லாச் செய்து தரேனுங்க.'

'உன் குழந்தைக்கு உடம்பு நன்றாக ஆகிவிட்டது. நீ ஏன் பின்னே எங்கள் வீட்டுக்கு வரப்போகிறாய்? அவரவர் வேலை முடிந்துவிட்டால் மறந்துதான் போகிறார்கள், என்றாள் சாந்தா, திடீரென்று மூண்ட குரோதத் துடன்.

'அம்மா, அம்மா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க! ஐயா இப்போதெல்லாம் ஆஸ்பத்திரியில் தவிர யாரையும் பார்க்கிறதில்லேன்னாங்க. அப்படியும் ஒருநாள் வீட்டுக்கு வந்தேன்...'

'உம்?'

'ஒண்ணுமில்லீங்க. உங்களுக்குத் தொட்டில்தானே செய்து தரணும்?' என்று பேச்சை மாற்றினான், தச்சன்.

'ஆமாம். நாளைக்கு வாயேன். புத்தகத்தில் ஒருபுது மாதிரி இருக்கிறது. காட்டுகிறேன் என்றாள் சாந்தா.

'சரிங்க, எதுக்கும் வீட்டிலேயும் சொல்லிவையுங்க.

தச்சன் வேகமாக நடந்து சென்று விட்டான். அவன் பேச்சில் சங்கோஜம் அதிகமாக இருந்ததோ?

'யார் அவனைத் தடுத்திருப்பார்கள்?' -யார் என்று சாந்தாவின் மனசுக்குத் தெரியாமல் இல்லை. இப்படிப் பட்ட சிறு சிறு சம்பவங்கள் தான் தங்கள் உறவில் சிறு விரிசல்களை ஏற்படுத்துவதாக எண்ணினாள் அவள். 'தச்சனைப் போனற்வர்களை அவமதிப்பது ஆண்டவனுக்கு இழைக்கும் அபசாரம் போல.'- ஒவ்வொரு விநாடியும் அவளது பாமர மனம் அவர்கள் சாபத்திற்கு அஞ்சிய வண்ணம் இருந்தது. 'நாளைக்கு அவன் வந்ததும் அவன் ஆசி மொழிகளின் பலனைப் பற்றிச் சொல்ல வேண்டும், என்று நினைத்தாள் சாந்தா.

மறுநாள் தச்சன் வந்தபோது சாந்தா உள்புறம் வேலையாக இருந்தாள். கணவனின் உரத்த குரல் கேட்டு அவள் முன்பக்கம் வந்தபோது தச்சன் தயங்கித் தயங்கி நிற்பது தெரிந்தது. உடனே அவள் அவனை நோக்கி விரைந்தாள். 'வா, அப்பா என்று அவனை வரவேற்று விட்டு, கணவனிடம் சமாதானம் கூறலானாள்: 'இவனை நேற்று அகஸ்மாத்தாகப் பார்த்தேன். நம் குழந்தைக்குத் தொட்டில் செய்யச் சொல்லலாமே? கைராசியாக இருக்கிறது' என்றாள் தணிவான குரலில்.

'உனக்கென்று தனி ஆசைகள் வந்து விடும்! டிக்ஸன் கம்பெனியில் ஆர்டர் கொடுத்தால் பேஷான தொட்டில் வரும். இந்த மாதிரி கந்தல்துணிக் கரிவேஷக் காரர்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டு உறவாடு வதில் உனக்கு ஒரு பித்து என்று, கடுமையாகப் பேசினான் திவாகரன்.

சாந்தாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்தத் தச்சனைப் பார்க்கவும் அவளுக்குச் சங்கடமாக இருந்தது. அவள் கணவனிடமே மீண்டும் திரும்பினாள். 'அவனை நானே தான் வரச் சொன்னேன். எப்படிப் போ கச் சொல்வது?' என்று கெஞ்சினாள்.

'உடனே போகச் சொல். அவன் செய்வதைவிட ஆயிரம் மடங்கு அழகான சாமானை நான் வாங்கித் தருகிறேன். ஒரு வீட்டில் அறையிலிருக்கிற எந்த சாமானும் ஒரே மாதிரி அழகாக இருக்க வேண்டாமா? நடுநடுவில் காட்டு வேலையைப் புகுத்துவார்களா? நீயே சொல்' என்றான் கணவன்.

'தொட்டில்தானே?...'

'தொட்டில்தான். இவனெல்லாம் வீட்டு வாசலில் நிற்பது எனக்குப் பிடிக்கவில்லை' என்று இரைந்தே பேசினான் திவாகரன்.

சாந்தா தன் ஏமாற்றத்தை அடக்கிக் கொண்டு உள்ளே போனாள். அதே சமயம் அந்தத் தச்சன் வெகு வேகமாகத் தெருவைக் கடந்து செல்வதைக் கண்ணுற்றாள். அவள் மனம் மிகவும் வேதனையுற்றது. ஆயினும் என்ன செய்வது? அதை மறக்க அவள் மீண்டும் ஏதோ வேலையில் ஈடுபட்டாள்.

நாளடைவில் சாந்தாவுக்குத் தச்சனின் நினைவு மறந்துவிட்டது. கணவனின் பேச்சும் நியாயமெனப்பட்டு விட்டது. அவள் தன் வீட்டைச் சுற்றியிருந்த பொருள்களை யெல்லாம் பார்வையிட்டாள். புது மெருகு மின்ன, அபூர்வ சாமான்கள் நிரம்பிய இல்லத்தைக் கண்டதும் அவளுக்கே பெருமையாக இருந்தது.

திவாகரன் இப்பொழுது ஊரில் பிரபல டாக்டர். கார்களில் வரும் நோயாளிகளே அதிகமாக இருந்தனர். தவிர, உள்ளூர் சர்க்கார் ஆஸ்பத்திரியிலும் சில மணி நேரம் அவன் வேலை செய்து வந்தான்.

பல மாதங்கள் சென்றன.

சாந்தாவுக்கு இப்பொழுது இரண்டாவது குழந்தை பிறக்கப்போகிறது. இதற்குமேல் பிறக்கக்கூடாது என்று வைத்தியர்கள் கூறிவிட்டனர்.

அவள் மாலை உலாவச் சென்றபோது அந்தத் தச்சன் மீண்டும் அவள் கண்ணில் பட்டான். தைரியமாக அவனை அழைத்து, வேலையும் கொடுத்துவிட்டாள் அவள். மீண்டும் பழைய சபலம் வந்துவிட்டது அவளுக்கு. அவன் செய்தால்தான் தன் மனசுக்குத் திருப்தி ஏற்படும் என்று அவள் தன் கணவனிடமும் வலியுறுத்திக் கூறினாள்.

'மரத்தடியில் கண் மறைவாகச் செய்யட்டும்' என்றான் திவாகரன்.

'ஏன்?' என்று கேட்டாள் சாந்தா.

'ஏன் என்று சொல்லியாக வேண்டுமோ?' என்று திவாகரன் கோபமாகத் திருப்பிக் கேட்டான். சாந்தாவுக்குப் புரிந்துவிட்டது. ஊரில் பெருமதிப்பு கொண்ட டாக்டராக இருக்கும் அவன், பல பெரிய மனிதர்கள் வரும் இடத்தில், கந்தல் துணியும் எலும்புக் கூடுமாக இருக்கும் தச்சன் குப்பையைக் கிளப்பிக்கொண்டு வேலை செய்வதை விரும்பமாட்டான் என்பதை அவள் உணர்ந்து கொண் டாள். எப்படியும் தான் ஆசையோடு ஆரம்பித்த வேலை முடியட்டும் என்று நினைத்து அவள் மேலே பேசாமல் இருந்து விட்டாள். 'கடவுளே, அவரை மன்னித்து விடு' என்று தனக்குள் இறைஞ்சினாள்.

சாந்தா தச்சனை மோட்டார் ஷெட்டில் விட்டு விட்டு வீடு நோக்கித் திரும்பியபோதுதான் அந்தச் சக்கிலியக் கிழவனைப் பார்த்தாள். காலையிலேயே 'ஜோடு ரிபேர்' என்று கத்திக் கொண்டு வந்தவன் அவன். அப்பொழுதே சாந்தா அவனை விரட்டி அடித்திருப்பாள். ஒரு தச்சன் இருப்பதே போதுமே! கூட, நாரும் நரம்புமாக ஒரு சக்கிலியக் கிழவன், அழுக்கு உடையும் நாற்றத் தாலையு மாக வாசற்படியில் நின்றால்...! அந்தக் கிழவன் இப்பொழுது அந்தக் கப்பல போன்ற காரின் அருகில் நிம்மதியாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். சாந்தா அங்கு விரைந்தாள். 'ஏ கிழவா, எழுந்து போ' என்றாள்.

காரின் டிரைவரும் அவள் குரலைக் கேட்டுக் காரினுள்ளிருந்து மரியாதையோடு இறங்கி வந்து கிழவனை எழுப்பினான்.

'சரிதான், அம்மணி ஜுரம் ஒடுக்குது. மழை பெய்யுது. நான் எங்கே போறது? மழை நின்னா நானே போறேன். இங்கேயேவா குடியிருக்கப் போறேன்?' என்றான் கிழவன், எழுந்திருக்காமலேயே.

'பிடிவாதத்தைப் பார்!' என்று கூறினாள் சாந்தா. ஆயினும் அவளுடைய அந்தராத்மா கிழவன் பகர்ந்த தில் நியாயம், தன் பேச்சு அநியாயம் என்பதை எடுத்துக் காட்டியது.

'சரிதான், ஐயா. அதெல்லாம் ஏன் கதை பேசறே? சும்மா எழுந்து போய்க்கினே இரு' என்றான் டிரைவர். ஆனால் சக்கிலியக் கிழவன் திரும்பக்கூட இல்லை. சாந்தா பேசாமல் உள்ளே வந்தாள். அங்கே ஹாலில் திவாகரன் பெருமகிழ்வோடு பல பழங்களையும் பட்டாசுக் கட்டுகளையும் எடுத்து எடுத்துப் பார்த்துக் கொண்டிருந் தான்.

'பார், சாந்தா, இந்தச் சாமான்களைப் பார்க்கும் போதே தீபாவளி வந்து விட்டமாதிரி இருக்கிறது. ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு எவ்வளவு சந்தோஷ மாக இருக்கும்!' என்று ஆர்ப்பரித்தான் அவன்.

பெருமூச்சு விட்டாள் சாந்தா. வெளியே வீதியை நோக்கினாள். மழை இடைவிடாமல் பெய்து கொண்டி ருந்தது. அதைச் சவால் விடுவதுபோல, வெள்ளையும் நீலமுமான நீண்ட கார் ஒன்று வாயிலில் நின்றது. அதையே உற்று நோக்கியவளாக 'மழையோ கொட்டு கிறது. எனக்கோ பலஹுீனமாக இருக்கிறது. உங்கள் ஆஸ்பத்திரி முழுவதும் ஒரு சுற்று வருவதற்குள் போதும் என்றாகிவிடும் என்றாள்.'

'நீதானே அதற்குப் பொருத்தமானவள் என்று நேர்த்தெடுத்திருக்கிறார்கள்? நீயும் ஸ்ரீமதி ஜோஸபும்தான் அழகான பெண்மணிகள். உன் கையினால் பழமும் பிஸ்கோத்தும் கொடுத்தால் நோயாளிகளுக்கு உடம்பு பாதி குணமாகிவிடும் என்று எண்ணம்' என்றான் திவாகரன்.

'கால் இற்று விடும்.'

எனக்காக இதுகூடச் செய்யமாட்டாயா, சாந்தா?

'இப்படியெல்லாம் காக்காய் பிடித்து, அந்த மனிதனை வசப்படுத்தி நீங்கள் வெளிநாடு போகப் போகிறீர்களாக்கும்?'

'அப்படித்தான் வைத்துக்கொள்ளேன். தவிரவும், அரைலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து, வைத்தியக் கல்லூரிக்கு இடமும் தந்த மனிதன் ஆயிற்றே? அவர் சொன்னபடி செய்ய வேண்டாமா, சொல்.'

'பாக்கு வெட்டி தத்துவம். நிர்ப்பந்தக் கடமை.'

'ஏது, ஏது, நீ பெரிய எழுத்தாளி ஆகிவிடுவாய் போலிருக்கிறதே?' என்று கேலி செய்தான் திவாகரன்.

சாந்தா சிரித்தாள். தன் கணவனுக்காக ஒன்று செய்கிறோம் என்று நினைத்ததும் அவள் உடல் சோர்வு கூட மறைந்து விட்டது போலும். உடனே உற்சாகத்துடன் 'சரி, காரில் வைக்கச் சொல்லுங்கள், கிளம்புகிறேன்' என்றாள் கணவனை நோக்கி.

பழங்களையும், பட்டாசுகளையும் கொண்டு வினியோகிக்கும் போது குழந்தைகளின் முகமெல்லாம் எப்படி மலரும்! அந்தக் குழந்தை வார்டைப் பார்ப்பதற் காகவே அவள் இந்த வேலையை ஒப்புக்கொண்டாள்

'சாந்தா முடிந்தால் நீ அப்படியே டாக்டர் சீதாவையும் பார்த்து விட்டு வந்து விடு' என்றான் திவாகரன்.

'பார்த்தாயிற்று எல்லாம்' என்றாள் சாந்தா.

'என்ன சொன்னாள்?'

'தெரியவில்லையா? பிரர்த்தனைகள் செய்வதும், குறிப்பிட்ட தச்சன் கையால் ஒன்று செய்யவேண்டும் என்று நான் தவிப்பதும்- இவை போதாதா, புரிந்து கொள்ள?'

'சீதா கூடவா உன்னைப் பயமுறுத்தி விட்டாள்? என்னால் நம்பமுடியவில்லையே?' என்றான் திவாகரன்.

'சீதா பயமுறுத்தவில்லை. எனக்குத் தெரியாதா என்ன?'

திவாகரனுக்குத் தன் கண்களிலிருந்து கவலையை மறைக்க முடியவில்லை. 'சாந்தா, விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறியிருக்கிற காலம் இது' என்று மனைவியை ஆசுவாசப்படுத்த முயன்றான் அவன்.

'எல்லாவற்றிற்கும் மேல் ஆண்டவன் இருக்கிறானே? அதனால்தான் இந்தத் தச்சன் கையால் சிறு மண்டபம் ஒன்று செய்யச் சொல்லி, அதில் கிருஷ்ண விக்கிரகத்தை வைத்து அலங்கரித்து உங்கள் தீபாவளி பார்ட்டியில் வைக்கப் போகிறேன்.'

'பிறகு?'

'எனக்கு நல்லபடியானால் இந்தக் குழந்தைக்கு அவன் கைப்பட தொட்டில் செய்யச் சொல்லப் போகிறேன்.'

'பைத்தியத்துக்கும் ஓர் அளவு வேண்டாமா?'

'வரம்புக்குள் இருப்பதைப் பயித்தியம் என்பார்களா, யாராவது?' என்று சிரித்துக்கொண்டே கேட்டுவிட்டு சாந்தா காரில் செல்லத் தயாரானாள்.

சாமான்கள் யாவும் அந்தக் காரில் ஏற்றப்பட்டன. சாந்தா வண்டியில் ஏறுவதற்கு முன் ஒரு விநாடி நின்று காரைப் பார்த்தாள். வெறும் வண்டியா அது, குபேரனின் வாகனம் போல இருந்தது. இந்த ஊரின் குபேரன்தானே எம்பெருமாள் செட்டி? ஒருமுறை ஆபரேஷன் செய்து அவரைப் பிழைக்க வைத்ததிலிருந்து செட்டியாருக்கு திவாகரனிடம் அபாரப் பற்று.

காரில் ஏறின சாந்தா, எதிர்ப்பக்க ஜன்னல் ஓரமாக உட்காரப் போனாள். சக்கிலியக் கிழவன் அப்பொழுதும் அங்கே இருப்பதைப் பார்த்தாள்.

'ஏன் அப்பா இன்னமுமா பிடிவாதமாக இங்கேயே இருக்கிறாய்?' என்றாள் அவள். அதற்கு மேலே அவளால் கடினமாகப் பேச முடியவில்லை. முன்பானால் திவாகரனே அந்தக் கிழவனுக்கு மருந்து தந்து, படுக்க ஓரிடமும் கொடுத்திருப்பான். இப்பொழுதுதான் அதைப் பிரஸ்தாபிக்கவும் கூடாதே?

டிரைவர் இறங்கி, 'ஏய், கிழவா, எழுந்து போகிறாயா இல்லையா?' என்று மிரட்டினான்.

இதற்குள் இவர்களுடைய உரத்த குரல்களைக் கேட்டுக்கொண்டே திவாகரன் வெளியே வந்தான். 'யாரது? சும்மா ஏன் கெஞ்சிறீங்க? இரண்டு பேராகத் தள்ளிக்கொண்டு போய் கேட்டுக்கு வெளியே தள்ளுங்கள் என்று பணித்தான்.

கிழவன் மெல்ல எழுந்தான். முணு முணுத்துக் கொண்டே தன் துணிமணி சாமான்களைச் சேர்த்து எடுத்துக் கொண்டான். தள்ளாடித் தள்ளாடிக் கிளம்பினான்.

கிளம்பு முன் ஒரு முறை தன் கண்களை மலர விழித்தான். 'ஐயா, டாக்டரே, அந்தத் தச்சப் பயலும், இந்தச் சக்கிலியப் பயலும் செய்யறதை விட நீ ஒண்ணும் அதிகமாகச் செய்யல்லே. நான் தைக்கிற தோல் வெய்யிலுக்கு இதமான செருப்புக்கும், வயல்களுக்குப் பாய்ச்சக் கவலைகளுக்கும் உபயோகமாவுது. நீ தைக்கிற தோலோ மண்ணுக்கும் நெருப்புக்கும் தானே இரை யாவுது? யாருக்குப் பிரயோஜனப்படுது? என் மாதிரிக் கிழவனை அதட்டி விரட்டத்தானே உபயோகப்படுது?

செட்டியார் மவராசன் வீடு கட்டி வாடகைக்கு விட்டு கொள்ளையா சம்பாதிக்க எங்களை ஒரே ராவிலே அடிச்சுத் துரத்தினான். அந்த ஜுரம்தான் இன்னமும் விடலே...

'அந்தத் தச்சன் மரத்த ராவுறான். சாமி குந்த வைக்கக் கோயில் வருது, சின்னக் குழந்தையைத் தூங்கப் பண்ணத் தொட்டில் வருது. நீ அறுக்கிற எலும்பு, நாய் கடிக்கக்கூட அகப்படுறதில்லே...

'நீங்க எல்லாம் ஒரு அப்பன் வவுத்திலே பிறந்த பிறவியும் இல்லை, ஒரு பிள்ளை பெத்த பெரிய மனுஷனும் இல்லை. நல்லா வாழு. மேடை கட்டி வாழு. அந்தச் செட்டியாரும் இன்னும் பெரிய தேர் வாங்கி விளங்கட்டும்... தூ!' என்று துப்பிவிட்டு, ஆவேசம் வந்தவன்போல் கத்தியவாறே சென்றான் கிழவன்.

'ஓகோ, 'கனகநகர் எக்ஸ்டென்ஷன்' விஷயமோ? என்று திவாகரன் ஏளனமாகக் கேட்டான்.

'ஆமாங்க' என்று பல் தெரியச் சிரித்தான் டிரைவர் காரைக் கிளப்பிக்கொண்டே.

'குழந்தை லதாவைப் பார்த்துக் கொள்ளுங்கள். மாடியில் விளையாடிக் கொண்டிருக்கிறாள்' என்று தீனமான குரலில் கூறிவிட்டு, சாந்தா ஸீட்டின் பின்னால் சாய்ந்தாள். கிழவனின் பேச்சு அவளைக் கலக்கி விட்டது.

கார் பத்தடி கூட நகர்ந்திருக்காது. கிழவனும் இன்னும் கேட்டை எட்ட வில்லை. எங்கிருந்தோ, மின்னல் போல் கையில் குடையும் தானுமாக லதா காருக்குக் குறுக்கே பாய்ந்தாள்.

'அம்மா, நானும் காரிலே!' என்று அவள் குரல் கேட்டதுதான்- 'ஐயோ!' என்று சாந்தா அலறி விட்டாள்.

சக்கிலியக் கிழவனும் அதே சமயத்தில் பாய்ந்திருக்க வேண்டும். குழந்தையும் அவனும் குண்டுக்கட்டாக ஒரே மூட்டைபோல உருண்டு பக்கத்து அலங்காரப் புதரில் போய் விழுந்தனர். காரும் கிரீச்சிட்டு நின்றது.

சாந்தாவுக்குக் கனவுபோல இருந்தது- காரிலிருந்து இறங்கினதும், குழந்தையை எடுத்ததும் அவளுக்கே தெரியவில்லை.

சக்கிலியக் கிழவன் பரிதாபமாக விழுந்து கிடந்தான். தச்சன் அவனை எழுப்ப முயன்று கொண்டிருந்தான்.

சாந்தாவின் உடலெல்லாம் பதறிக் கொண்டிருந்தது. அவள் வயிறு சங்கடம் செய்தது. அவள் குழந்தையை அருகில் விட்டுவிட்டு, வயிற்றைப் பிடித்துக் கொண்டவளாக ஈரமாயிருந்த வாசற் படிக்கட்டில் அமர்ந்து விட்டாள்; பிரமையாக, கற்சிலையாக, நிலைகுத்திப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

டாக்டர் திவாகரன் மின்னல்போல் பாய்ந்து, டிரைவரைப் பார்த்து 'கொஞ்சம் பிடி' என்றான். தச்சன் கிழனை ஒரு பக்கம் தூக்க இன்னமும் தவித்துக் கொண்டிருந்தான்.

'நான் தொட மாட்டேனுங்க' என்று தயக்கத்துடன் சொல்லிவிட்டு டிரைவர் வெள்ளை வெளேரென்ற உடைகளையும் அப்பழுக்கற்ற காரையும் பார்த்தான்.

திவாகரன் அவனை ஒரு கணம் நோக்கினான். பிறகு திரும்பிப் பார்க்காமல், சேற்றில் புரண்ட சக்கிலியக் கிழவனை வாரித் தூக்கிக்கொண்டு தன் வீட்டினுள் நுழைந்தான்.

அக்கிழவனின் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு பின்னால் தொடர்ந்த தச்சன், ஒரு கணம் நின்று கண்களை மூடி ஆகாயத்தை நோக்கிக் கரம் குவித்தான்.

சாந்தாவுக்கு எழுந்திருக்க முடியவில்லை. அசையக் கூட முடியவில்லை. எங்கோ திரையில் நடக்கும் காட்சியைப்போல ஒன்றியும் ஒன்றாமலும் பார்த்தவாறு இருந்தாள் அவள்.

சற்றைக்கெல்லாம் திவாகரன் வெளியே வந்தான். 'டிரைவர், காரைக் கொண்டுபோய் விடு. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று உங்கள் ஐயாவிடம் சொல். இந்தச் சீட்டைக் கொடு' என்றான்.

டிரைவர் வினியோக சாமான்களுடன் கம்பீரமாகக் காரைச் செலுத்திக் கொண்டு போய்விட்டான்.

சாந்தா ஓரளவு உணர்வு பெற்று எழுந்து நின்றாள். தன் கணவன் முகத்தைப் பார்த்தாள். அதில் ஒரு போராட்டமே நடப்பதைத் தெரிந்து கொண்டாள். தன் ஆசைகளே திரண்டு அந்தக் காருடன் போவதைக் காண்பவன் போல ஏக்கம் நிழலாடியது, அவன் வதனத்தில். ஆயினும் உடனே ஒரு தெளிவும் மெல்ல இதழ் விரிந்தது. உலகத்திலுள்ள பெரிய போர் அல்லவா அது? தன்னலமும் பிற நலமும் யுத்தம் செய்து, பிறநலம் வென்ற திருநாள் அது!

'சாந்தா, உள்ளே வா' என்று அழைத்தான் கணவன்.

'வாழ்க்கைப் பாதை ஒரே நொடியில் திரும்பி விடாது. மனமும் தேய்ந்த பாதையை விட்டுத் தடம் புரண்டு விடாது. ஆயினும் கால் எடுத்து வைத்த திசை சரியானது தான்' என்று சாந்தாவின் மனத்தினுள் ஒரு குரல் ரகசியம் கூறியது.

'அம்மா!' என்று, அழுகை ஓய்ந்தும் விசும்பல் நீங்காது வசித்துக் கொண்டு வந்த லதா, கையிலிருந்து எதையோ 'ணங்' என்று போட்டாள்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் சாந்தா. அவளுடைய வெண்கல உருளிதான் இரண்டாகப் பிளந்து விட்டிருந்தது.

'கூப்பிடக் கூப்பிடத் தூக்கிக் கொண்டு ஓடிவந்து விட்டது, அம்மா' என்று வேலைக்காரன் கூறினான்.

சாந்தாவின் செவியில் ஒன்றும் விழவில்லை. தன் புது வாழ்வின் அமைப்பே ஏதோ ஒரு தெய்வத் தம்பூரில் சுருதி சேர்ந்ததுபோல மெய் மறந்து அனுபவித்தாள் அவள்.

'அப்பா! நான் பயந்து விட்டேன். கிழவன் பிழைத்துக் கொண்டு விடுவான், நல்ல காலமாக' என்று கூறிக் கொண்டு மனைவியிருகில் வந்து அமர்ந்தான் திவாகரன். அவனைப் பெருமிதத்தோடு பார்த்தாள் சாந்தா.

'சாந்தா, கிழவன் பேச்சு உன்னை உலுக்கி விட்டதல்லவா?'

சாந்தா பதிலே சொல்லவில்லை.

'...முதலில் அவன் பேச்சு எனக்கு ஆத்திரத்தையும், ஏளனத்தையும்தான் உண்டாக்கியது. அவன் குழந்தையைக் காப்பாற்ற ஓடியதும் என் கண்களை மறைத்த சருமத்தை யாரோ கிழித்து எடுத்தமாதிரி அதிர்ச்சி ஏற்பட்டது. என்னையறியாது நான் ஓடினேன். டிரைவர் தன் உடை அழுக்காகிவிடும் என்று மறுத்ததும் என்னுள் என்னவோ செய்தது. என் உருவமே என் எதிரில் நின்று சவால் விடுவதுபோல் இருந்தது. புதிதாக உருவாகியிருக்கும் என்னை அப்பால் தள்ளிவிட்டுப் பழைய திவாகரனாக மாறிவிடத் தீர்மானித்து விட்டேன்' என்றான் அவன்.

சாந்தா தன் இரு கண்களையும் மூடிக் கைகுவித்து ஆண்டவனைத் தியானித்தாள்.

'சாந்தா, தச்சன் வீடடுக்குப் போய்விட்டு நாளை வருகிறேன் என்றான். நான் இரவு முழுவதும் கிழவன் அருகில் இருக்க நேரிடும்...'

சாந்தா தன் கணவனைப் பார்த்தாள். 'சீமைக்குப் போக...' என்று ஆரம்பித்தாள்.

'இருப்பதை வேண்டிய இடத்தில் பயன்படுத்தாமல் பதுக்கி வைத்து, புதிதாகத் தேடுவதில் என்ன பயன்? ஏன், சாந்தா, நீ உருளி வாங்கி அடுக்குகிறாயே- அது போல.'

'உருளியைக் குழந்தை உடைத்து விட்டாள். ஆனால் அதை மறுபடியும் புதிதாக வார்த்துக்கொள்ளலாம்.'

'வாழ்க்கையும் அவ்வளவுதான். நல்ல உயிர் நிலையில் ஓர் அடி விழுந்தால் மனிதனும் மாறிவிடுவான். இன்று லதா மாடியில் இருந்திருந்தால்...'

லதா தகப்பனின் மடியில் ஏறி, தன் கைகளால் அவன் கழுத்தை இறுகத் தழுவிக் கொண்டாள்.

'லதா, நீ என் வாழ்வின் மின்னல் கொடியடி' என்று கொஞ்சினான் திவாகரன்.

வெளியே அடுத்த வீட்டில் கொளுத்திய பூமத்தாப்பின் நீல ஒளி வீடெங்கும் சுபசூசகம் போல் பரவியது.

(சுதேசமித்திரன்- தீபாவளி மலர்-1962)
